3. தகவல் கோரல்.

(அ) பால் கமிஷன் அறிக்கை மீது நடைபெற்ற விவாதம்—தொடர்பாக

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, நேற்று நாவலர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே 30 ஆம் தேதி பால் கமிஷன் அறிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் ; காலையிலேயும் கொடுத்திருக்கிறேன். அதை இன்றைக்கு நீங்கள் நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று நாட்கள் பால் கமிஷன் அறிக்கைபற்றி எவ்வளவோ பேசி ஆகிவிட்டது. நம்முடைய பேரவை விதி 64 இல் சொல்லியிருப்பதைக் கூறுகிறேன்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை விவாதிக்கும் பொருட்டு, பேரவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் தீர்மானம் பின்வரும் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன :

(i) ஒரு நாள் கூட்டத்தில், 61 வது விதியின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்மானம் விவாதிக்கப் பெறலாகாது.

(ii) ஒரு தீர்மானத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளை விவாதிக்கக் கூடாது.

(iii) அண்மையில் நடந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வினை (recent occurence) பற்றியதாக மட்டுமே தீர்மானம் இருக்க வேண்டும்.

(iv) அதே கூட்டத் தொடரில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வகையிலோ பேரவையில் விவாதிக்கப் பெற்ற ஒரு பொருள் பற்றி மீண்டும் விவாதம் எழுப்புவதாகத் தீர்மானம் இருத்தலாகாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, உங்களுடைய தீர்ப்பை நான் கொஸ்டின் செய்யவில்லை. ஆனால் நேற்றைய தினம் சப்மிஷன் செய்து இந்தத் திருச்செந்தூர் கொலைக் காரர்களைக் கைது செய்வது சம்பந்தமாக ஏதாவது இன்ஃபர்மேஷன் இருக்கிறதா என்று கேட்டால் அதைக்கூட அரசாங்கம் சொல்ல முடியாதா? அரசாங்கத்தைத் தாங்கள் கேளுங்கள், இருந்தால் சொல்லட்டும், இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி மூன்று நாட்கள் இங்கே விவாதித்திருக்கிறோம்.

*திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஒத்தி வைப்புத் தீர்மானங்களாகத் தாங்கள் எடுத்துக் கொள்ளாததை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இன்றையதினம் இந்தப் பிரச்னை, ஏறக்குறைய 25,000 பேர்களிலிருந்து 30,000 பேர்கள்

1982 பிப்ரவரி 18] [திரு. க. அன்பழகன்]

தென் மாவட்டங்களில் ஊர்வலமாகச் செல்லக்கூடிய—எதிர்க் கட்சித் தலைவரின் தலைமையில் செல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டு நான்காவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலைகள் காரணமாக ஏற்கனவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டாலும்கூட ஒரு தகுந்த முடிவு நடைமுறைக்கு வந்ததாகத் தெரியுமானால் இந்தப் பெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற வேண்டியது தொடர்வது ஒருவேளைத் தவிர்க்கப் படக்கூடும்.

அரசாங்கத்திற்கு நல்ல எண்ணம் இருப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப்பட்ட துன்பத்தை ஏற்றுக்கொள்வதை நான் விரும்பவில்லை என்று ஒரு கருத்தையும் தெரிவித்து அவருக்குக் கட்டளை இடுவதற்கு நான் யார் என்று வேறொரு இடத்திலே கேட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் கட்டளையிடாவிட்டாலும், பால் கமிஷன் அறிக்கையின்மீது அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கையை இந்த அளவுக்கு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு அரசுக்கு இருக்குமானால் ஒருவேளை முதலமைச்சருடைய நல்ல எண்ணம் அந்த வடிவத்தின் மூலமாக வெளிப்படுமானால் இந்தத் துன்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்படாது அல்லவா என்ற காரணத்தினால்தான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒருவேளை சட்டமன்ற நடைமுறையிலே, விதிமுறைகளின் மூலமாகக் கொண்டு வர முடியாவிட்டாலும்கூட, எதிர்கட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தினால், தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கமிஷன் பற்றி விவாதம் 2 நாட்கள் என்று எடுக்கப்பட்டு, மூன்று நாட்கள் நடைபெற்ற சூழ்நிலையை தாங்கள் எடுத்துச் சொன்னீர்கள். அரசு எடுத்து இருக்கிற நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை இந்த அவையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது கருத்துக்களும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புவார்களானால் அது முறைப்படி கேட்கப்பெறவேண்டுமே தவிர, திடீரென்று எழுந்து கேட்டால் பதில் வராது. ஒரு குறுகிய கால கேள்வி அல்லது வேறு ஏதாவது வகையில் எடுத்துக் கேட்டால், என்ன நிலைமை என்று எடுத்துச் சொல்லலாம். திடீரென்று எழுந்து கேட்டால், அன்றைக்கு இருந்த நிலையோடு இருக்கிறது.